SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

பெயர்: **ஜுலைமாதத் தேர்வு - 2019** மதிப்பெண்கள்: 40

வகுப்பு: 8 (2L) பாடம் : **தமிழ்** தேதி: 26.7.19

## பகுதி - அ

**I. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

செயற்கை உரங்கள் மண்ணின் தன்மையை கெடுப்பவை. இலை தழைகள், ஆடு மாடுகளின் எரு, பிண்ணாக்குகள் என பல இயற்கை உரங்கள் உள்ளன. இவற்றைத் தொழு உரங்கள் என்பர். பசுவிடமிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்கள், அதாவது கோமயம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருட்களைக் கலந்து செய்வது பஞ்சகவ்வியம். தொழு உரங்கள், பஞ்சகவ்வியம் போன்றவற்றைப் பயன்படுத்தி இயற்கை முறையில் வேளாண்மை செய்து பயன் பெறலாம். இயற்கை வேளாண்மை அங்கக வேளாண்மை எனப்படும். அங்கக வேளாண்மை ஆறு கூறுகளைக் கொண்டது.

**வினாக்கள்** :-

1. இயற்கை வேளாண்மை என்பது ---------------- வேளாண்மை.
   அ). அங்கக ஆ). செயற்கை இ). பண்ணை ஈ). பயிர் வேளாண்மை
2. மண்ணின் தன்மையை கெடுப்பவை
   அ). தொழு உரங்கள் ஆ). பஞ்சகவ்வியம்
   இ). செயற்கை உரங்கள் ஈ). தழையுரங்கள்
3. அங்கக வேளாண்மையின் கூறுகள் --------------
   அ). ஆறு ஆ). ஏழு இ). பத்து ஈ). ஒன்பது
4. மனிதர்களுக்கு நன்மை தருவது ------------------
   அ). வேளாண்மை ஆ). இயற்கை வேளாண்மை
   இ). செயற்கை வேளாண்மை ஈ). பண்ணை
5. “பஞ்ச கவ்வியம்” இதில் ‘பஞ்ச’ என்ற சொல்லின் பொருள் ---------------
   அ). ஆறு ஆ). ஏழு இ). மூன்று ஈ). ஐந்து

## பகுதி - ஆ (எழுதுதல் )

**II.6. பின்வரும் பத்தியை மூன்றில் ஒரு பகுதியாக சுருக்கி வரைக.** (5)

தமிழ் நாட்டின் தேசியப் பறவையாக மரகதப் புறா விளங்குகிறது. இப்பறவை மழைக்காடுகளிலும், அடர்ந்த ஈரமான இடங்களிலும் வாழ்கின்றது.

இப்பறவையின் இறக்கைகள் மரகதப்பச்சை நிறத்தில் இருக்கும். மரகதப்புறா , பறப்பதனை விட நிலத்தில் நடப்பதனையே மிகவும் விரும்புகிறது. இப்பறவை விதைகள், பழங்கள், பல்வேறுவகையான தாவரங்களை விரும்பி உண்ணும். இப்பறவை மரங்களில் கூடுகட்டி, முட்டையிடுகிறது. இப்பறவையின் முட்டை மஞ்சள் கலந்த வெண்ணிறத்தில் காணப்படும். இப்பறவை எளிதாகப் பழகக்கூடிய வகையில் உள்ளது. புறாக்கள் கதிர் வடிவம் உடையவை. இவற்றின் அளவு 20-25 செமீ ஆகும். உடலானது தலை, கழுத்து, நடுவுடல், வால் எனும் பகுதிகளையுடையது. இறக்கையில் 23 இறக்கை இறகுகள் உள்ளன. இதில் மேல்கையில் இணைந்துள்ள 11இறகுகள் முதனிலை இறகுகள் எனப்படும். நடுக்கையில் இணைந்துள்ள 12 இறகுகள் இரண்டாம் நிலை இறகுகள் எனப்படும். வால் பகுதியில் 12 இறகுகள் உண்டு. இவை விசிறி வடிவில் இணைக்கப்பட்டுள்ளன. உருவ இறகுகள் சற்றுச் சிறியவை, மென்மையானவை. இவை உடலின் வெப்பத்தைப் பாதுகாக்கும். இழை இறகுகள் மிகவும் மென்மையானவை ஆகும். மன்னர்கள் காலத்தில் கடிதப்போக்குவரத்து மற்றும் தூது ஓலை அனுப்புவதற்கு நன்கு பயிற்சிகொடுத்துப் பழக்கப்பட்ட புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் இப்போதும் புறாக்களுக்கான பந்தயம் நடைபெறுகிறது.

III. **கூறியவாறு செய்க:** (5)

7. தாம் + இனி - சேர்த்து எழுதுக
8. நலமெல்லாம் - பிரித்து எழுதுக.
9. காலன் என்பதன் பொருள் என்ன?
10. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் _______
11. மதிப்பெண்கள் - வாக்கியம் அமைக்க.

**பகுதி - இ (இலக்கணம்)**

**IV. கோடிட்ட இடங்களை நிரப்புக. (6)**

12. நடப்பான் என்பதன் இறந்த காலம் __________
13. கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்துவது ________ வினைமுற்று.
14. வினைமுற்றின் வேறு பெயர் ________
15. வாழ்க என்பது ________ வினைமுற்று.
16. அடடா! என்ன அழகு! - என்பது ________ தொடர்.
17. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது - வினாத்தொடராக மாற்றுக.

**பகுதி - ஈ (இலக்கியம்)**

**V. வினாக்களுக்கு விடை தருக** (9)

18. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?
19. பழியின்றி வாழும் வழியாக, திருக்குறள் கூறுவது யாது?

20. உடல் நலத்துடன் வாழ கவிமணி கூறும் கருத்துகளை எழுதுக.

**VI. விடுபட்ட திருக்குறள் சீர்களை எழுதுக.** (2)

21. வருமுன்னர்க் காவாதான் __________ எரிமுன்னர்
வைத்தூறு போலக் _________ .

**VII. பின்வரும் துணைப்பாட வினாவிற்கு விடையளி:** (8)

22. வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையின் கருத்தை சுருக்கி எழுதுக.